# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 43/2020 தேதி- 09.07.2025

(P.W.1) - குமார்

**6** முதல் **8** வரையான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. துரைசாமி மற்றும் சீமாட்டி என்பவர்கள் என்னுடைய என் அம்மாவின் பெற்றோர்கள் என்றால் சரிதான். என் தாத்தா மற்றும் பாட்டிக்கு 7 பிள்ளைகள் என்றால் சரிதான். எனக்கு தற்போது என்ன வயது என்றால் 53 ஆகும். என் மூத்த சேகாதரி அஜீத்தா என்றால் சரிதான். அமுதா என்னுடைய மூத்த சகோதரி என்றால் சரிதான். 4-ஆம் வாதியான ராதாசோபியா என்னுடைய தங்கை என்றால் சரிதான். என் மூத்த சகோதரி அமுதாவிற்கு வயது 55 ஆகும். மூத்த சகோதரி அஜீத்தாவிற்கு 57 வயது என்றால் சரிதான். என் அம்மாவின் திருமணம் சுமார் 1967-ஆம் நடைபெற்று இருக்கும் என்றால் சரிதான். ரோஸ்மேரி என்னுடைய அம்மாவின் அக்கா என்றால் சரிதான். ரோஸ்மேரிதான் சீமாட்டி மற்றும் துரைசாமிக்கு பிறந்த மூத்த குழந்தை என்றால் சரிதான். என் அம்மா சுகந்தி 2-வது பிள்ளை என்றால் சரிதான்.

2. என் அம்மாவின் அக்கா ரோஸ்மேரிக்கு 1967 -க்கு முன்பே திருமணம் நடைபெற்று இருக்கும் என்றால் சரிதான். குளோரிபாய் என் தாத்தாவிற்கு எத்தனையாவது பிள்ளை என்றால் 3-வது பிள்ளை ஆகும். ரோஸ்மேரியை மதுரையில் தான் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு மேற்சொன்ன ரோஸ்மேரி மதுரையில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். குளோரிபாயை ஆனைக்குழி என்ற ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அவர் தன் குடும்பத்தோடு ஆனைக்குழியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். இதே பாகபிரிவினை சம்பந்தமாக அசல் வழக்கு எண். 286/2012 என்ற வழக்கு பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருந்து அது தள்ளுபடி (Dismissed for Default) செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. இவ்வழக்கில் குளோரிபாய் மற்றும் ரோஸ்மேரியும் பட்டிகை சொத்தில் தான் வசித்து வருகிறார் என்றாலும் வசிப்பதற்கு வேறு இடம் இல்லை என்றும் என் வாதுரையில் 6-வது பத்தியில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். குளோரிபாய் மற்றும் ரோஸ்மேரியும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்சொன்ன குளோரிபாய் மற்றும் ரோஸ்மேரியும் மதுரையிலும், ஆனைக்குழியிலும் குடும்பத்துடன் வசித்து வருவதாக சொல்வது தான் சரி என்றால் சரிதான். நீதிமன்றத்தை சுத்தமாக

கைகாளால் அனுகவில்லை என்றாலும் பொய்யான சங்கதிகளை கொண்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சித்தி ரஞ்சிதம் என்பவர் திருமணம் ஆகாமல் வெளிநாட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான் அவ்வபோது வந்து செல்வார். மேற்சொன்ன ரஞ்சிதம் 15 ஆண்டுகளாக ஊருக்கு வரவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன நபரின் Pass Port -யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அவரின் Pass Port அவரிடம் தான் உள்ளது.

4. இவ்வழக்கின் வாதுரையில் உள்ள கையொப்பம் அவருடையது இல்லை என்றாலும் வழக்கு நடக்கும் விவரம் அரவருக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் 5 ஆம் பிரதிவாதியான சிங்என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்சொன்ன சிங்க்கு 3 பிள்ளைகள் 2 ஆண்கள் மற்றும் 1 பெண் என்றால் சரிதான். அவர்களில் 2 ஆண் பிள்ளைகளை தான் இவ்வழக்கின் 6 மற்றும் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். பெண் பிள்ளையின் பெயர் சுகினா என்றால் சரிதான். மேற்சொன்ன சுகினாவை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன சுகினா இவ்வழக்கிற்கு முக்கிய கட்சி என்றாலும் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1 ஆம் இன சொத்தில் தாத்தாவின் கல்லறை உள்ளது என்றால் சரிதான். என் பாட்டியின் கல்லறையும் அங்கு தான் உள்ளது என்றால் தனியாக உள்ளது.

5. இறந்த 5-ஆம் பிரதிவாதியான சிங் என்பவரின் கல்லறையும் ஏ-பட்டிகை சொத்தில் தான் உள்ளது. இறந்து போன செல்வராஜ் என்பவரின் கல்லறையும் ஏ-பட்டிகை சொத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். ஏ-பட்டிகை சொத்து ஊரின் ஒதுக்கு புறமான பகுதியில் உள்ளது என்றால் சரிதான். பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் பிளாட் நம்பர்.5 உள்ள இடம் கல்லறைத் தோட்டம் என்றால் சரிதான். என் பாட்டி இறக்கும் போது கல்லறைத் தோட்டமாகதான் ஏ-பட்டிகை சொத்தை பயன்படுத்த வேண்டும் என்று சொல்லி இருந்தார் என்றால் இல்லை. 2-ஆம் இன சொத்து எங்களுக்கு உரிமைப்பட்டது என்பதை காண்பிப்பதற்கான எந்த ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2-ஆம் இன சொத்தை பொருத்து எந்த பாக உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

6. அசல் வழக்கு எண். 286/2012 என்ற வழக்கு பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இவ்வழக்கில் கோரியுள்ள அதே பரிகாரம் கேட்டு அது தள்ளுபடி (Dismissed for Default) செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன விவரத்தை இவ்வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையான சங்கதியை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்றும் எண்ணத்தோடு

இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 286/2012 என்ற வழக்கு 13.09.2012-ல் கடைசியாக வாய்மொழியாக பாகம் கேட்டேன் என்று சொல்லிவிட்டு 20.02.2020-ல் பாகம் கேட்டதாகவும் அதன் பிறகு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு தேதியை குறிப்பிட்டு வழக்கிற்காக நான் பொய்யான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றாலும் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய படவேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே போடப்பட்ட பாக வழக்கின் வாதுரையையோ அல்லது எதிர்வாதுரையையோ இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u>

என் தாத்தாவிற்கு 7 பிள்ளைகள் என்று நான் சொல்வது இறந்து போன செல்வராஜ்யையும் சேர்த்து சொல்கிறேன் என்றால் சரிதான்.